பக்கங்கள் 17+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | ஆனி 02 திங்கட்கிழமை 16.06.2025 | அதிர்வு 317

## “இந்திய மீனவர்களை மனிதாபிமானத்துடன் கைது செய்யுங்கள்”

### வடக்கு மீனவர்கள் கோரிக்கை

(ந.லோகதயாளன்)

இந்திய மீனவர்களை மனிதாபிமானத் துடன் கைது செய்யுங்கள் என 04

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# கொழும்பு மாநகர சபையில் மலர்ந்தது என்.பி.பி. ஆட்சி!

## மண்கவ்வியது சஜித் அணி மேயராகப் பல்தசார் தெரிவு

கொழும்பு மாநகர சபையைத் தேசிய மக்கள் சக்தி கைப்பற்றி யுள்ளது.

அதற்கமைய கொழும்பு மாந கர சபையின் புதிய மேயராகத் தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட விராய் கெலீ பல்த சார் தெரிவு செய்யப்பட்டுள் ளார்.

கொழும்பு மாநகர சபை மேயரைத் தெரிவு செய்வதற்காக இரகசிய வாக்கெடுப்பை மேற் கொள்ள மேல் மாகாண உள்ளூ ராட்சி சபை ஆணையாளர் எஸ். கே. ஜயசுந்தர முன்னிலையில் இன்று முற்பகல் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. 04







### தமிழரசு உள்ளிட்ட 4 கட்சிகளின் ஆதரவுடன்

# வவுனியா மாநகர சபை சங்குக் கூட்டணி வசம்!

## மேயராகச் சுந்தரலிங்கம் காண்டீபன் தெரிவு










**(கி.வசந்தன்)**

வவுனியா மாநகர சபையில் ஒரு வாக்கு வித்தியாசத்தில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் காண்டீபன் மேயராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை, ஜனநாயகத் தேசியக் கூட்டணியைச் சேர்ந்த பரமேஸ்வரன் கார்த்தீபன் பிரதி மேயராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா மாநகர சபைக்கான முதலாவது மேயர் மற்றும் பிரதி மேயர் தெரிவு, வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவநந்தினி பாபு தலைமையில், வவுனியா மாநகர சபையின் ஒன்றுகூடல் மண்டபத்தில் இன்று முற்பகல் நடைபெற்றது.

இதன்போது மேயர் தெரிவு மற்றும் பிரதி மேயர் தெரிவு பகிரங்க வாக்கெடுப்பின் மூலம் நடத்தப்பட்டன. அந்த வகையில் சங்குக் கூட்டணியின் சார்பில் போட்டியிட்ட சுந்தரலிங்கம் காண்டீபனுக்கு ஆதரவாக 11 வாக்குகளும், தேசிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்ட சிவசோதி சிவசங்கருக்கு 10 வாக்குகளும் கிடைக்கப் பெற்றன.

இதனடிப்படையில் சங்குக் கூட்டணியைச் சேர்ந்த காண்டீபன் புதிய மேயராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இதனையடுத்துப் பிரதி மேயருக்கான தெரிவு இடம்பெற்றது. பிரதி மேயராக ஜனநாயகத் தேசியக் கூட்டணி சார்பில் போட்டியிட்ட பரமேஸ்வரன் கார்த்தீபனுக்கு ஆதரவாக 11 வாக்குகளும், சுயேச்சைக் குழுவைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் பிரேமதாஸுக்கு ஆதரவாக 10 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

இதனையடுத்து ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் உறுப்பினர் பரமேஸ்வரன் கார்த்தீபன் பிரதி மேயராகத் தெரிவு செய்யப்பட்டார்.

ஆளும் கட்சி சார்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஐக்கிய மக்கள் சக்தி, ஜனநாயகத் தேசியக் கூட்டணி என்பன இணைந்து ஆட்சி அமைத்துள்ளன.



# ஏறாவூர் நகர சபை தவிசாளராக மு.கா. உறுப்பினர் நழீம் தெரிவு

## சங்குக் கூட்டணியைச் சேர்ந்த கஜேந்திரன் பிரதி தவிசாளராகப் பதவியேற்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, ஏறாவூர் நகர சபையின் தவிசாளராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எம்.எஸ். நழீமும், உப தவிசாளராக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியைச் சேர்ந்த ஞானசேகரன் கஜேந்திரனும் தெரிவு செய்யப்பட்டனர்.

17 உறுப்பினர்களைக் கொண்ட ஏறாவூர் நகர சபைக்கான தவிசாளர் மற்றும் உப தவிசாளரைத் தெரிவு செய்யும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் இடம்பெற்றது.

தவிசாளர் தெரிவுப் போட்டியில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் எம்.எஸ். சமீம், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சார்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தற்போதைய நகர சபை உறுப்பினருமான முஹம்மட் சாலி நழீம் போட்டியிட்டனர்.

தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஒருவர் பிரசன்னமாக நிலையில் 16 பேருடன் தவிசாளர், உப தவிசாளர் தெரிவுகள் பகிரங்க வாக்கெடுப்பு மூலம் நடைபெற்றன.

இதன்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி சார்பாகப் போட்டியிட்ட எம்.எஸ்.நழீமுக்கு ஆதரவாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 7 உறுப்பினர்களும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியைச் சேர்ந்த ஓர் உறுப்பினரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த ஓர் உறுப்பினரும் என மொத்தமாக 9 உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த எம்.எஸ்.சமீமுக்கு ஆதரவாக ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த 4 உறுப்பினர்களும், தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியைச் சேர்ந்த 2 உறுப்பினர்களும், ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த ஓர் உறுப்பினரும் என 7 உறுப்பினர்கள் வாக்களித்தர்

இதன் பிரகாரம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எம்.எஸ். நழீம் 2 மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்று தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து பிரதி தவிசாளர் பதவிக்குப் போட்டியிட்ட ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியைச் சேர்ந்த ஞானசேகரன் கஜேந்திரன் 9 வாக்குகளையும், ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த கே.எம்.எம். அன்வர் 7 வாக்குகளையும் பெற்றனர். அதற்கமைய தமிழ்த் தேசியக் கூட்டணியைச் சேர்ந்த ஞானசேகரன் கஜேந்திரன் பிரதி தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இந்த நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம் ஹிஸ்புல்லா, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் உட்பட கட்சி ஆதரவாளர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.












# வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபையில் ஆட்சியமைத்தது தேசிய மக்கள் சக்தி கட்சி!

## ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் உப தவிசாளராக ஏகமனதாகத் தெரிவு

(கி.வசந்தன்)

வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபையில் தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்த சுதர்சன சாமர வீரக்கோன் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் பிரதி தவிசாளராக ஐக்கிய மக்கள் சக்தியின் குணபால சரத்மது ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபைக்கான தவிசாளர், உப தவிசாளர் தெரிவுகள், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவநந்தினி பாபு தலைமையில், பிரதேச சபை மண்டபத்தில் இன்று பிற்பகல் நடைபெற்றது.

இதன்போது தவிசாளர் தெரிவுக்கு இருவரது பெயர்கள் பிரேரிக்கப்பட்டன. தேசிய மக்கள் சக்தி சார்பில் சுதர்சன சாமர வீரக்கோன் மற்றும் சுயேச்சைக் குழு சார்பில் கசுன் சுமதிபால ஆகியோரின் பெயர்கள் பிரேரிக்கப்பட்டன.

இதன்போது இந்தத் தெரிவை இரகசிய வாக்கெடுப்பின் மூலம் நடத்துமாறு 10 பேரும், பகிரங்கமாக நடத்துமாறு 7 பேரும் வாக்களித்தனர்.

பெரும்பான்மை வாக்குகளின் அடிப்படையில் தவிசாளர் தெரிவு இரகசிய வாக்களிப்பின் மூலம் நடத்தப்பட்டது.

வாக்களிப்பு முடிவுகளின்படி தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினருக்கு 12 வாக்குகள் கிடைக்கப்பெற்றன. சுயேச்சைக் குழு உறுப்பினருக்கு 5 வாக்குகள் கிடைக்கப்பெற்றன.

அதன்பிரகாரம் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் சுதர்சன சாமர வீரக்கோன் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இதனையடுத்து உப தவிசாளருக்கான தெரிவு இடம்பெற்றது. உப தவிசாளராக ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் குணபால சரத்மதுவின் பெயர் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்களால் பிரேரிக்கப்பட்டது.

வேறு உறுப்பினர்களின் பெயர்கள் பிரேரிக்கப்படாமையினால் போட்டியின்றி அவர் உப தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.





# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### கொழும்பு மாநகர...

அதற்கமைய இரகசிய வாக்கெடுப்பு நடவடிக்கை நடைபெற்றது.

கொழும்பு மாநகர சபை மேயர் பதவிக்குத் தேசிய மக்கள் சக்தி சார்பில் விராய் கெலீ பல்தசாரும், ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் ரீஸா சரூக்கும் போட்டியிட்டனர்.

இந்நிலையில், கொழும்பு மாநாகர சபையின் மேயராகத் தேசிய மக்கள் சக்தியின் விராய் கெலீ பல்தசார் 61 வாக்குகளைப் பெற்றுத் தெரிவாகியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்ட ரீஸா சரூக் 54 வாக்குகளை மாத்திரம் பெற்றனர்.

கொழும்பு மாநகர சபையில் 117 உறுப்பினர்கள் உள்ளனர். இரகசிய வாக்கெடுப்பில் 115 வாக்குகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. 2 வாக்குகள் நிராகரிக்கப்பட்டன.

அதேவேளை, கொழும்பு மாநகர சபையின் பிரதி மேயராகத் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஹேமந்த குமார தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### இந்திய மீனவர்களை...

வடக்கு மாகாண மீனவர்கள் எழுத்தில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடக்கு மாகாண மீனவர் சங்கப் பிரதிநிதிகள் பலர் கொழும்புக்குச் சென்று கடற்றொழில் அமைச்சர், பிரதி அமைச்சர், கடற்றொழில் திணைக்களப் பணிப்பாளர், கடற்படையினர் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடினர். இதன்போதே மேற்படி கோரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது, இந்திய மீனவர்களின் தடைக்காலம் நிறைவுற்று மீன்பிடிக்கக் கடலுக்கு வருவதனால் இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டும் மீனவர்களை மனிதாபிமானத்துடன் குறைந்தது தினமும் மூன்று படகுகளைப் பிடிக்க வேண்டும்.

கடற்படையினரால் பிடிக்கப்பட்டு நீதிமன்றத்தால் அரசுடமையாக்கப்பட்ட படகுகளைத் துறைமுகப் பகுதிகளில் இருந்து 3 மாத காலப் பகுதிக்குள் அப்புறப்படுத்த வேண்டும்.

பாரம்பரிய சிறிய படகு மீனவர்கள் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்தித்துக் கலந்துரையாடச் சந்தர்ப்பம் ஏற்படுத்தித் தர வேண்டும் போன்ற கோரிக்கைகளை வடக்கு மாகாண மீனவர்கள் முன்வைத்துள்ளனர்.




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## கர்தினாலுக்கும் அதே கதி!

ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டு தாக்குதல்கள் நடைபெற்று ஆறு ஆண்டுகள் கடந்துவிட்டன. 270க்கும் மேற்பட்ட உயிர்களைக் காவு கொண்டு மற்றும் 500 பேர் வரை படுகாயம் அடையக் காரணமான இந்தக் கொடூரம் தொடர்பில் ஆறு ஆண்டுகள் கழித்தும் இன்னமும் நீதி நடைமுறைப்படுத்தப்பட்டு, பொறுப்புக் கூறல் நிலைநாட்டப்படாதமையால் ஏற்பட்டுள்ள தமது ஆதங்கங்கள் தொடர்பில் மீண்டும் முணுமுணுத்து இருக்கிறார் கொழும்பு பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித்.

இந்த மோசமான கொடூர சம்பவம் நடைபெற்று இதுவரை காலத்துக்குள் இந்த நாடு நான்கு ஜனாதிபதிகளை சந்தித்து விட்டது. மூன்று அரசுகளை கண்டு விட்டது. ஆனால் விடயம் முன்னோக்கி நகர்வதாக இல்லை.

இவ்விவகாரத்தில் இலங்கை அரசியல்வாதிகள் வழங்கும் வாக்குறுதிகளை நம்பி மீண்டும் ஒரு தடவை கர்தினால் மல்கம் ரஞ்சித் ஏமாற்றம் அடைந்திருக்கிறார் என்பதை கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று தனது ஆசிரியர் தலையங்கத்தில் வெளிப்படையாகச் சுட்டி காட்டி இருக்கிறது.

இலங்கை அரசியல்வாதிகள் வாக்குறுதிகளை அளிப்பதில் அசகாய சூரர்கள். 1970 தேர்தலில் அரிசியை தேடி ஆலாய்ப் பறந்த மக்களுக்கு சந்திரனிலிருந்தாவது அரிசி கொண்டு தருவோம் என்று சொல்லி வாக்குத் திரட்டியவர்கள் இந்த அரசியல் வாதிகள் என்று அந்தப் பத்திரிகை சுட்டிக்காட்டுகிறது.

“இலங்கை அரசியல்வாதிகள் கூறும் கொள்கைகள் சித்தாந்த ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் வேறுபட்டவையாக இருக்கலாம். ஆனால் அவர்கள் அனைவருக்கும் பொதுவாக ஓர் அம்சமாக செயல்படும் ஒரு குறிப்பிட்ட கொள்கை உள்ளது - அவர்கள் மாக்கியவெல்லியனிசத்தை பின்பற்றுகிறார்கள். அவர்களின் வழிகாட்டும் கொள்கை ‘கொடுக்கப்பட்ட வாக்குறுதி கடந்த காலத்தின் தேவை; மீறப்பட்ட வாக்குறுதி நிகழ்காலத்தின் கட்டாயம்’ என்பது போல் தெரிகிறது. எனவே, பொதுஜன பெரமுன கர்தினால் ரஞ்சித்துக்கு அளித்த வாக்குறுதியை மீறியதில் ஆச்சரியமில்லை, அது போலவே தேசிய மக்கள் சக்தியும் அவ்வாறே செய்துள்ளது.” - என்று அந்த ஆசிரிய தலையங்கம் தெரிவிக்கின்றது.

அதைவிட முக்கியமான ஒரு விடயத்தையும் அது சுட்டிக்காட்டியுள்ளது.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களை நடத்திய பயங்கரவாதிகளுடன் சில இராணுவப் புலனாய்வு அதிகாரிகளின் தொடர்புகளை மறைக்க விரும்பியதால், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கம் விசாரணைகளை தாமதப்படுத்துவதாகக் கூறப்படுகிறது என்ற தகவலையும் அந்தப் பத்திரிகை அதில் சுட்டிக் காட்டியுள்ளது.

இலங்கையின் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் தமிழ் மக்களுக்கு எதிராகப் புரியப்பட்ட யுத்தக் குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான கொடூரங்கள், அடிப்படை மனித உரிமை மீறல்கள் போன்றவற்றினால் பல்லாயிரம் தமிழர்கள் கொன்றொழிக்கப் பட்டார்கள். அந்தக் கொடூரத்தை புரிந்தவர்கள் இலங்கை இராணுவத்தினர் என்ற குற்றச்சாட்டு காரணமாக அந்த குரூரங்களுக்காக பகிரங்கமாக நீதி, நியாயம் கேட்க மறுத்து, பேரினவாதத்தோடு அணி சேர்ந்து நின்றவர் இதே பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித்தான். அதனை இந்தப் பத்தியில் பல தடவைகள் வெளிப்படையாகவே சுட்டிக் காட்டி இருக்கிறோம்.

அதே காரணத்துக்காக, இப்போது அவரது தரப்புக்கும் நீதி மறுக்கப்பட்டு இருக்கின்றது. தமிழினம் மீதான கொடூரத்துக்கு நீதி கேட்க மறுத்த மதத் தலைவர் அவர் அதே மறுப்பை இப்போது எதிர் கொண்டிருக்கிறார். விதைத்ததுதானே அறுவடையாகும் - வினை விடயத்திலும் கூட.

# வீதி புனரமைப்பைக் கண்காணிக்க பொது மக்களை உள்ளடக்கிய குழு!

## சாவகச்சேரி நகர சபை உப தவிசாளர் கிஷோர் வலியுறுத்து

(த.சுபேசன்)

வீதி புனரமைப்பு நடவடிக்கை தொடர்பில் கண்காணிக்க பொது மக்களை உள்ளடக்கிய கண்காணிப்பு குழு ஒன்றை அமைக்க வேண்டும் என்று சாவகச்சேரி நகர சபையின் உப தவிசாளர் கிஷோர் வலியுறுத்தியுள்ளார்.

சாவகச்சேரி நகர சபை எல்லைக்குள் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் மீசாலை அல்லாரை வீதி புனரமைக்கப்பட்டு வருகின்றது. இந்த வீதிப் புனரமைப்பின் தரம் தொடர்பிலும், புனரமைப்பின் போது பின்பற்றப்படுகின்ற நடைமுறை தொடர்பிலும் பொது மக்களால் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. இந்த நிலையில் சம்பவ இடத்துக்குச் சென்ற சாவகச்சேரி நகர சபையின் உப நகர பிதா ஞா.கிஷோர் மற்றும் உறுப்பினர் ரமேஷ் ஆகியோர் வீதி புனரமைப்புப் பணிகளை பார்வையிட்டதோடு பொது மக்களோடும் கலந்துரையாடினர்.



இதன்போதே உபதவிசாளர் கிஷோர், வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தரோடு கலந்துரையாடி அந்தப் பகுதி மக்களை உள்ளடக்கிய கண்காணிப்பு குழு ஒன்றை உருவாக்கிய பின்னர் வீதி புனரமைப்பு பணிகளை முன்னெடுக்குமாறு வேண்டுகோள் விடுத்தார். அதுவரை புனரமைப்பு வேலைகளை நிறுத்தி வைக்குமாறு கேட்டுக்கொண்டார்.

இதனை ஏற்றுக்கொண்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக கண்காணிப்புக் குழு அமைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.





# அமரர் ஆசிரியர் அ.க. இராமலிங்கத்தின் 25 ஆம் ஆண்டு நினைவில் நூல் வெளியீடு

அமரர் ஆசிரியர் அ.க. இராமலிங்கத்தின் 25 ஆம் ஆண்டு நினைவை முன்னிட்டு அவரது புதல்வரான மூத்த வழக்குரைஞர் இரா.திருக்குமரநாதனின் ‘சட்டமும் மக்களும்’ நூல் வெளியீடு நேற்று (15) திருகோணமலை இராமகிருஷ்ண மிஷன் இந்துக் கல்லூரியின் ஆரம்பப் பிரிவின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

ஐயாவின் மூத்த புதல்வன் இரா. சண்முகநாதன் மலரின் சிறப்பு பிரதிகளை கிழக்கு மாகாண ஆளுநரது பிரத்யோக செயலாளர் ஏ.இராஜசேகர், ஸ்ரீ பத்திரகாளியம்மன் கோவில் பிரதம குருக்கள், இராமகிருஷ்ண மிஷன் இந்துக் கல்லூரியின் அதிபர் எஸ்.கணேஷலிங்கம், திருகோணமலை மாநகர சபை உறுப்பினர் உ.அஜித்குமார் ஆகியோருக்கு வழங்கினார்.

சிறப்பு அழைப்பாளர்களுக்கு மூத்த வழக்குரைஞர் இரா.திருக்குமரநாதன் மலரின் சிறப்பு பிரதிகளை வழங்கி வைத்தார்.

அறிவு ஒளி மையத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு நடைபெற்ற பேச்சு, கவிதை, ஓவியப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு வெற்றிக் கோப்பைகள் மற்றும் பதக்கங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் திருக்கோணமலையின் முன்னணி பாடசாலைகளின் அதிபர்கள், முன்னாள் அதிபர்கள், அரசியல் செயற்பாட்டாளர்கள், வழக்கறிஞர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், நலன் விரும்பிகள் பொது மக்கள் என நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.















# சிவதொண்டர் திருக்கூடத்தின் ஏற்பாட்டில் திருஞானசம்பந்தர் குருபூசை நிகழ்வுகள்!

(பழுவூரான்)

உலக சிவனடியார்கள் திருக்கூட்டத்தின் வழிகாட்டலில் சிவதொண்டர் திருக்கூட்டத்தின் ஏற்பாட்டில் மட்டிக்களி கதிரொளி அறநெறிப் பாடசாலை, நடராஜர் சைவசித்தாந்த பயிற்சி மையம், மட்டிக்களி மாதர் சங்கம், மட்டிக்களி திரௌபதாதேவி ஆலயம் இணைந்து, திருஞானசம்பந்தர் குருபூசையும், ஆன்மீக எழுச்சி ஊர்வலமும், மாணவர்களுக்கிடையிலான கலாசாரப் போட்டியும் மட்டிக்கழி கதிரொளி அறநெறிப் பாடசாலையில் நடத்தின.

நேற்று ஞாயிற்றுக்கிழமை (15) மட்டிக்களி கதிரொளி அறநெறிப் பாடசாலை அதிபர் திருமதி து.கமலேஸ்வரி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மாணவர்களுக்கு இடையில் நடத்தப்பட்ட கலாசாரப் போட்டியில் வெற்றியீட்டியோருக்குப் பரிசுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் “தமிழ் போற்றி சைவம் வளர்ப்போம்” எனும் தொனிப் பொருளில் சிவதொண்டர் திருக்கூடத்தின் 314 ஆவது சிவபணியாக தாய்த் தமிழ் உறவுகளுக்கு சிவசின்னமான உருத்திராக்கமும் அணிவிக்கப்பட்டது.

இதுவரை 53,800 தாய்த் தமிழ் உறவுகளுக்கு உருத்திராக்கம் அணிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.








# முல்லைத்தீவு மாஞ்சோலையில் எரிந்து நாசமாகிய கடைத்தொகுதி!

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாஞ்சோலை பொது வைத்திய சாலைக்கு முன்பாகவுள்ள கடைத் தொகுதியில் இன்று காலை (16) பாரிய தீ விபத்து ஏற்பட்டது.

பலத்த போராட்டங்களுக்குப் பின்னர் கடைத் தொகுதியில் ஏற்பட்ட தீ பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த தீ பரவலானது முதலில் எம்.வி.எம். உணவகத்தில் ஆரம்பித்து அருகில் உள்ள பாதணிக் கடைக்கு பரவி பாரிய தீ விபத்தாக மாறியது.

இதில் குறித்த உணவகம் மற்றும் பாதணிக் கடை என்பன முற்று முழுதாக எரிந்து அழிவடைந்துள்ளன. அருகில் உள்ள மேலும் இரு கடைகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

இந்த தீ பரவல் ஏற்பட்டதும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, கரைதுறைப்பற்று பிரதேச சபை, கடற்படையினர், இராணுவத்தினர் விரைந்து நீர்த்தாங்கிகள் மூலம் தீ பரவலை காலை 9.30 மணியளவில் முற்றுமுழுதாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தீயணைப்புப் பிரிவு இல்லாமையால் கிளிநொச்சி மாவட்டத்தின் உதவியை மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு நாடியிருந்தது.

இருப்பினும் தீ பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதால் கிளிநொச்சி மாவட்ட தீயணைப்புப் பிரிவின் உதவி கோரிக்கை இடை நிறுத்தப்பட்டது.

இந்த நிலையில் குறித்த பகுதிக்கு நேரடியாக சென்ற வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நிலமைகள் குறித்து ஆராய்ந்துள்ளார்.

அதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் தீயணைப்புப் பிரிவொன்று இல்லாமையால் கூடுதல் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன என்று நாடாளுமன்ற உறுப்பினர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

எனவே முல்லைத்தீவு மாவட்டத்தில் தீயணைப்பு பிரிவொன்றை ஏற்படுத்துவது தொடர்பில் தம்மால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் இதன்போது தெரிவித்தார்.



# பருத்தித்துறை சிவன்கோவிலின் மஹோற்சவப் பெருவிழா நாளை

வடமராட்சி, புலோலி பர்வதவர்த்தினி சமேத பசுபதீஸ்வரர் ஆலய வருடாந்த சிவன் மஹோற்சவப் பெருவிழா நாளை (17) செவ்வாய்க்கிழமை பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

விசேட திருவிழாக்களான சந்திரசேகரப் பட்டத்திருவிழா 23ஆம் திகதி திங்கட்கிழமையும் பூந்தண்டிகைத் திருவிழா 28 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 7 மணிக்கும் சப்பறத்திருவிழா 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் பிச்சாடனர் திருவிழா 30 ஆம் திகதி திங்கட்கிழமையும் இடம்பெறும்.

தேர்த்திருவிழா அடுத்த மாதம் முதலாம் திகதி செவ்வாய் கிழமை காலை 8.30 மணிக்கும் தீர்த்தத்திருவிழா 2 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கும் நடைபெறுவதுடன் மஹோற்சவம் நிறைவு பெறும்.

ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சோ.ஜெயந்தக்குருக்கள் மஹோற்சவத்தை நடத்தவுள்ளார்.







# தேசிய கூடைப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் அம்பாறை மாவட்ட அணி சாம்பியனானது!

(வி.ரி.சகாதேவராஜா)

இலங்கை கூடைப்பந்தாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் 23 வயதுக்கு உட்பட்ட வீரர்களை உள்ளடக்கிய தேசியமட்டக் கூடைப்பந்தாட்ட போட்டியில் அம்பாறை மாவட்ட அணி முதலிடத்தைப் பெற்றுச் சாம்பியனாக வெற்றி வாகை சூடியுள்ளது.

அம்பாறை மாவட்ட கூடைப்பந்தாட்ட அணியாக காரைதீவு கூடைப்பந்தாட்ட கழக அணியினர் பிரதிநிதித்துவப் படுத்தினர்.

இலங்கையின் 15 மாவட்டங்களின் பங்குபற்றுதலுடன் மாத்தறையில் கடந்த 9,10,11,12 திகதிகளில் இந்தச் சுற்றுப் போட்டி இடம்பெற்றது.

இந்தச் சுற்றுப்போட்டித் தொடரில் அம்பாறை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் காரைதீவு அணியானது குழு 'ஏ' யில் இடம்பிடித்து முதலாவது போட்டியில் வவுனியா மாவட்ட அணியினருடன் மோதி 19:74 எனும் புள்ளி அடிப்படையில் வெற்றியீட்டி 2 ஆவது போட்டியில் மாத்தளை மாவட்ட அணியுடன் மோதி 71:25 எனும் புள்ளி பெற்று மாத்தளை மாவட்ட அணியினை 46 புள்ளி வித்தியாசத்தில் வீழ்த்தி அம்பாறை மாவட்ட அணி கால் அரையிறுதி போட்டிக்கு தெரிவானது.

கால் அரையிறுதி போட்டியில் நுவரெலியா மாவட்டத்ததை அம்பாறை மாவட்ட அணி எதிர்கொண்டு 59:40 எனும் புள்ளி அடிப்படையிலும் அரையிறுதி போட்டியில் மாத்தறை மாவட்டத்தை அம்பாறை மாவட்ட அணி எதிர்கொண்டு 58:46 எனும் புள்ளி அடிப்படையில் வெற்றியீட்டி இறுதி போட்டிக்கு முன்னேறியது.

இந்தச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியானது கடந்த வியாழக்கிழமை மாத்தறை லிபீமா உள்ளக அரங்கில் இடம்பெற்றது.

இறுதிப் போட்டியில் அம்பாறை மாவட்ட அணியானது பதுளை மாவட்ட அணியை 53:50 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிகொண்டு சம்பியனானது.

வரலாற்றில் முதல் தடவையாக காரைதீவு கூடைப்பந்தாட்ட அணி தேசிய ரீதியில் சாம்பியனாக வெற்றி வாகை சூடியுள்ளமையை அடுத்துப் பல தரப்பினரும் பாராட்டுக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

# கட்டாக்காலி கால்நடைகளால் உடப்பு மக்கள் பெரும் சிரமம்



(உடப்பு க.மகாதேவன்)

புத்தளம் மாவட்டம் உடப்பு கிராமம் உள்ளிட்ட ஆண்டிமுனை, சின்னக் கொலனி, வம்பிவட்டான் போன்ற பிரதான வீதியில் கட்டாக்காலி கால்நடைகளால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதனால் உடப்பு மக்கள் நடமாடுவதிலும் மற்றும் வாகனங்கள் செலுத்துவதிலும் பெரிய இடர்பாடுகளை எதிர் கொண்டு வருகின்றனர்.

இந்தப் பிரச்சினை கடந்த சில வருடங்களாக இடம்பெற்று வருகின்றது. இரவு நேரத்தில் உடப்பு பாலத்தில் உள்ள வீதியில் இந்த மந்தைகள் அப்படியே உறங்கிக் கொண்டு இருப்பது, விலகிச் செல்லாமை போன்றவற்றால் கடந்த சில மாதங்களில் விபத்துக்கள் பல இடம்பெற்றுள்ளன.

எனவே ஆராச்சிக்கட்டு பிரதேச சபை இதனை கவனத்தில் கொண்டு விபத்துக்களில் இருந்து மக்களை காப்பாற்றுமாறு உடப்பு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# வேலோடுமலையில் இருந்து கதிர்காமம்; 13 நாள் வேல்யாத்திரை ஆரம்பமாகியது!

( வி.ரி. சகாதேவராஜா)

மட்டக்களப்பு, சித்தாண்டி, இலுக்குப் பொத்தானை வேலோடுமலை முருகன் ஆலயத்தில் இருந்து ஆலய தலைவர் முருக பக்தர் முருகஸ்ரீ சு.தியாகராஜா தலைமையில் கதிர்காமம் நோக்கிய 13 நாள் வேல் பாத யாத்திரை வியாழக்கிழமை (13) ஆரம்பமாகியது.

வியாழக்கிழமை காலை முருக பெருமானின்வேல்சாமிகளாகவேலோடு மலை முருகஸ்ரீ தியாகராஜ சுவாமிகளிடம் சிவயோகி நமசிவாய சுவாமிகள் முன்னிலையில் காரைதீவு வேல் சாமிகளால் சிறப்பு வேல் பூஜை நடைபெற்று வேல் வாங்கும் படலம் வேலோடு மலையில் சிறப்பாக நடைபெற்றது.

வேலோடுமலையில் இருந்து கதிர்காம கந்தனின் வேலோடு அரோஹரா கோசம் முழங்க பாதயாத்திரை ஆரம்பமாகியது. அன்றிரவு இரவு மயிலம்பாவளியில் தங்கினர். மறுநாள் மாமாங்கேஸ்வரர் ஆலயத்தை தரிசித்த அவர்கள் குருக்கள் மடத்தில் தங்கினர்.

தொடர்ந்த இன்று திங்கட்கிழமை காலை திருக்கோவில் சென்று இரவு சங்கமான் கண்டி செல்வர். நாளை செவ்வாய்க்கிழமை் காலை – கோமாரி, ஊரணி, இரவு – பொத்துவில்.

18 ஆம் திகதி புதன்கிழமை காலை – நாவலாற்றும் பாலம், இரவு – பாணமை, 19 ஆம் திகதி வியாழக்கிழமை காலை – பாணமை, இரவு – சன்னியாசி மலை, 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை – உகந்தை மலை முருகன் ஆலயத்தை அடைவர்.

மறுநாள் 21 ஆம் திகதி சனிக்கிழமை சித்தர்கள் குரல் அமைப்பின் ஸ்தாபகர் சிவசங்கர் ஜீ தலைமையில் அங்கிருந்து வழமை போல் கதிர்காமம் நோக்கி கானகப் பாதையில் பிரவேசிப்பர்.

26 ஆம் திகதி கதிர்காம கொடியேற்றத்துக்கு வேல் ஒப்படைக்கப்படும் என்று சித்தர்கள் குரல் அமைப்பின் தலைவர் ஆதித்தன் தெரிவித்தார்.





# தற்கொலைகளில் இருந்து இளம் சமூகத்தை பாதுகாக்க விழிப்புணர்வுச் சைக்கிள் பவனி!

(வாலகிருஸ்ணா)

அதிகரித்துவரும் தற்கொலை களில் இருந்து இளம் சமூகத்தைப் பாதுகாக்கும் வகையில் மட்டக்களப்பு மயிலம்பாவெளி ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலய மாணவர்களால் நேற்று (15) மாபெரும் விழிப்புணர்வு சைக்கிள் பவனி நடத்தப்பட்டது.

மயிலம்பாவெளி ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் 80 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டுப் பல்வேறு நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் இந்த விழிப்புணர்வு நிகழ்வு நடத்தப்பட்டது.

பாடசாலையின் மாணவர்கள், பழைய மாணவர்கள் ஆகியோரின் ஏற்பாட்டிலும் பங்குபற்றுதலுடனும் சிறப்பாக இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பாடசாலையின் அதிபர் கு.பாஸ்கரன் உட்பட ஆசிரியர்கள், மாணவர்கள் இந்த சைக்கிள் விழிப்புணர்வு நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதன்போது பாடசாலையில் ஆரம்பித்த சைக்கிள் பவனியானது சவுக்கடி வீதி, விநாயகபுரம் வீதி, முருகன்கோவில் வீதி சென்று ஜனாதிபதி வீதியூடாக பாடசாலையை வந்தடைந்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக் காலமாக அதிகரித்துவரும் இளம்வயதினர் தற்கொலைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நடத்தப்பட்ட இந்த சைக்கிள் பவனியின்போது தற்கொலைகளை தடுப்பது தொடர்பான துண்டுப் பிரசுரங்களும் வழங்கப்பட்டன.




## மன்னார் நகர சபை எல்லைக்குள்

# சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்த மாடு அறுக்கும் நிலையத்துக்கு 'சீல்'!

(மன்னார் நிருபர் )

மன்னார் நகர சபை எல்லைக்குள் காணப்படும் மாட்டு இறைச்சி விற்பனை நிலையங்களுக்கான மாடு அறுக்கும் நிலையத்துக்கு மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனையால் 'சீல்' வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை அதிகாரிகளுக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வு நடவடிக்கையின் போது, மன்னார் பள்ளிமுனை பகுதியில் அமைந்துள்ள மாடு அறுக்கும் நிலையமானது பல வருடங்களாக சுகாதார நடைமுறைகளுக்கு அமைய செயற்படாமை கண்டறியப்பட்டது.

அத்துடன் அரச அறிவுறுத்தல்களுக்கு அமைய இயங்காத நிலையிலும் காணப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் மன்னார் பொதுசுகாதாரபரிசோதகர்கள்இணைந்து குறித்த நடவடிக்கையை மேற்கொண்டனர்.

குறிப்பாக மாடுகளை அறுக்கும் பகுதி அசுத்தமாக காணப்பட்டமை, உரிய சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படாமை, விலங்குக் கழிவுகள் சுற்றுப் பகுதிகளில் காணப்பட்டமை, கழிவு அகற்றும் செயற்பாடுகள் ஒழுங்கு படுத்தப்படாமை, கழிவுநீர் தேங்கிக் காணப்படுகின்றமை, மாடுகளை அறுக்கும் போது பின்பற்ற வேண்டிய சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படாமை, அரச அறிவுறுத்தல்கள் பின்பற்றப்படாமை, மாடு அறுப்பதற்கு உரிய கட்டமைப்பு காணப்படாமை போன்ற பல்வேறு குறைபாடுகளின் அடிப்படையில் குறித்த நிலையத்துக்குச் 'சீல்' வைக்கப்பட்டுள்ளது.



# காயத்ரி கிராமத்தில் நடைபெற்றுள்ள எழு வீடுகளுக்கு அடிக்கல் நடும் விழா

(வி.ரி. சகாதேவராஜா)

திருக்கோவில் பிரதேச செயலர் பிரிவில் "உங்களுக்கு வீடு நாட்டுக்கு எதிர் காலம்" எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தேசிய வீடமைப்பு அதிகார சபையால் தலா ஒரு மில்லியன் ரூபா பெறுமதியில் 7 பயனாளிகளுக்கான வீடுகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரன் தலைமையில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக நாடாளுமன்ற உறுப்பினரும் திருக்கோவில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான அபூபக்கர் ஆதம் பாவா கலந்துகொண்டு வைபவரீதியாக ஆரம்பித்துவைத்தார்.



இந்த நிகழ்வில் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி அனோஜா உஷாந், தேசிய வீடமைப்பு அதிகார சபையின் அம்பாறை மாவட்ட முகாமைத்துவ தொழிநுட்ப அதிகாரி பாஹிம், தேசிய மக்கள் சக்தியின் திருக்கோவில் பிரதேச சபை உறுப்பினர் பா.சுதாகரன், கிராம சேவை உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# புனே ஆற்றுப் பாலம் இடிந்து வீழ்ந்தது: 4 பேர் உயிரிழப்பு; பலரை காணவில்லை



புனேவில் உள்ள இந்திரயானி ஆற்றின் மீது இருந்த இரும்புப் பாலம் இடிந்து விழுந்ததில் சுற்றுலா பயணிகள் பலர் தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டனர். இந்த விபத்தில் 4 பேர் உயிரிழந்தனர்.

புனேவில் மாவல் தாலுகாவில் உள்ள பிரபலமான சுற்றுலாத் தலமான குண்ட்மாலாவில் உள்ள இரும்புப் பாலம் இடிந்து விழுந்த நேரத்தில், பாலத்தில் இருந்த சுற்றுலாப் பயணிகள் பலரும் பெருக்கெடுத்து ஓடிய ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டனர்.

தேசிய பேரிடர் மீட்புப் படை, பொலிஸ் மற்றும் பேரிடர் நிவாரணப் பணியாளர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர். 4 பேரின் உடல்கள் மீட்கபட்டுள்ளன. 15 முதல் 20 பேர் வரை ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சுமார் 250 வீரர்கள் இந்த மீட்புப் பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். ஆற்றின் நீரோட்டம் அதிகமாக இருப்பதால் மீட்புப் பணி கடினமாக இருப்பதாக அவர்கள் தெரிவித்துள் ளனர். பாலம் இடிந்து விழுந்ததில் 32 பேர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்க ளில் 6 பேரின் உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளது.

உயிரிழந்த நால்வரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்துள்ள மகாராஷ்டிரா முதல்வர் தேவேந்திர ஃபட்னாவிஸ் தலா 5 லட்சம் இந்திய ரூபா நிவாரணத் தொகை வழங்கவும் உத்தரவிட்டுள்ளார். மேலும் விபத்து குறித்து தொலைபேசி வாயிலாக பிரதமர் மோடி தன்னை தொடர்பு கொண்டு கேட்டறிந்தார் எனவும் அவர் தெரி வித்துள்ளார். கடந்த நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்பு புதுப்பிக் கப்பட்ட இந்த பாலத்தின் பாதுகாப்பு குறித்து அப்பகுதி மக்கள் ஏற்கெனவே கவலை தெரிவித்தனர் என கூறப்படு கிறது. மேலும் ஆற்றின் நீரோட்டத்தை காண அதிகமான மக்கள் பாலத்தின் மீது குவிந்ததே இந்த விபத்துக்கு காரணமாக கூறப்படுகிறது.

# சோனியா காந்தி மருத்துவமனையில்



வயிறு தொடர்பான பிரச்சினைகள் காரணமாக காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

டில்லியில் உள்ள சர் கங்கா ராம் மருத்துவமனையின் இரைப்பை சிகிச்சை பிரிவில் அவர் மருத்துவர் களின் கண்காணிப்பில் இருக்கின்றார் என மருத்துவமனை நிர்வாகம் தெரி வித்துள்ளது. அவர் விரைவில் நலம் பெற்று வீடு திரும்புவார் என காங்கிரஸ் ஆதரவாளர்கள் சமூக வலைதளங்களில் தெரிவித்து வருகின்றனர்.

முன்னதாக, கடந்த ஜூன் 7ஆம் திகதி இமாச்சலப் பிரதேசத்தின் சிம்லா வில் உள்ள இந்திரா காந்தி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் சோனியா காந்தி அனுமதிக்கப்பட்டார். சில சிறிய உடல்நலப் பிரச்சினைகள் காரணமாக அவர் அனுமதிக்கப்பட்டார் என கூறப்பட்டது.

இந்த ஆண்டு பெப்ரவரி மாதத்திலும், சோனியா காந்தி இதேபோன்ற வயிற் றுப் பிரச்சினைக்காக சர் கங்கா ராம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட் டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தந்தையின் இறுதி சடங்கில் பங்கேற்ற மகன் அகமதாபாத் விமான விபத்தில் உயிரிழந்தார்



இந்தியாவில் தந்தையின் இறுதிச் சடங்கில் பங்கேற்றுவிட்டு லண்ட னுக்கு திரும்பி சென்றபோது மகனும் விமான விபத்தில் சிக்கி உயிரிழந்த சம்பவம் அந்த குடும்பத்தை நிலை குலைய செய்துள்ளது.

ஏர் இந்தியா விமான விபத்தில் பலியான 241 பேரில் லாரன்ஸ் டேனி யல் கிறிஸ்டியனும் ஒருவர். இவர் லண்டனில் தனது மனைவியுடன் வசித்து வரும் நிலையில் தந்தை இறந்ததைத் தொடர்ந்து லாரன்ஸ் இந்தியா சென்றுள்ளார்.

தந்தையின் இறுதிச் சடங்கில் பங்கேற்றுவிட்டு லாரன்ஸ் மீண்டும் மனைவியைப் பார்க்க லண்டனுக்கு திரும்பும்போது எதிர்பாராத விதமாக விமான விபத்தில் சிக்கி பலியான சம்பவம் அவரது குடும்பத்தாரை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. ஒரே நேரத்தில் கணவன், மகன் என இரண்டு பேரையும் இழந்து தவிக்கும் தாயை ஆறுதல் சொல்லி தேற்ற முடியாமல் அந்த குடும்பம் தற்போது தவித்து வருகிறது.

இதுகுறித்து லாரன்ஸின் அம்மா ரவீனா டேனியல் கிறிஸ்டியன் கண் கலங்கியபடி கூறுகையில்,

“ கடந்த ஒன்றரை ஆண்டுகளாக லாரன்ஸ் அவனது மனைவியுடன் வேலை நிமித்தமாக லண்டனில் வசித்து வந்தான். எனது கணவர் 15 நாள்களுக்கு முன்பு இறந்ததையடுத்து லண்டனில் இருந்து இங்கு வந்தான். திரும்ப லண்டனுக்கு பிறப்படும்போது நாங்கள்தான் லாரன்ஸை வழி அனுப்பி வைத்தோம். எனது மகனை உயிரோடு பார்ப்பது அப்போதுதான் கடைசி என்பது எனக்கு அப்போது தெரியாது.” என்று கதறிஅழுதபடி தெரிவித்தார்.

இதனிடையே விமான விபத்தில் பலியானவர்களின் உடல்கள் வைக் கப்பட்டுள்ள சிவில் மருத்துவமனை கூடுதல் மருத்துவ கண்காணிப்பாளர் ரஜ்னீஷ் படேல் கூறுகையில்,

“ இதுவரை 15 பேரின் டிஎன்ஏ மாதிரிகள் விமான விபத்தில் பலியா னவர்களுடன் ஒத்துப்போயுள்ளது. இறந்த மூன்று பேரின் உடல்கள் அவர்களது குடும்பத்தினருடன் ஒப் படைக்கப்பட்டுள்ளது.” என்றார்.





# இஸ்ரேல் - ஈரான் போர் தீவிரம்: 3 ஆவது நாளாகவும் பதற்றம்

இஸ்ரேல் - ஈரான் போர் தீவிரமடைந்து வருகிறது. இஸ்ரேல் நடத்திய தாக்குதலில், ஈரான் தலைநகர் தெஹ்ரானில் உள்ள அணுசக்தி தலைமையகம் தீக்கிரையானது. எண்ணெய் வயல்கள் நாசமாகின. இதுவரை 140 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். ஈரான் நடத்திய பதில் தாக்குதலில், இஸ்ரேலில் 13 பேர் உயிரிழந்தனர். இரு தரப்பிலும் நூற்றுக்கணக்கானோர் படுகாயம் அடைந்தனர்.

அணுகுண்டு தயாரிப்பில் ஈரான் தீவிரம் காட்டியதால், அந்த நாட்டின் மீது இஸ்ரேல் விமானப்படை கடந்த 13 ஆம் திகதி தாக்குதல் நடத்தியது. அன்றைய தினம், ஈரானின் 4 அணுசக்தி தளங்கள் அழிக்கப்பட்டன. நாட்டின் மூத்த அணு விஞ்ஞானிகள் 9 பேர், இராணுவ தளபதிகள் 3 பேர் உட்பட ஏராளமானோர் கொல்லப்பட்டனர். இதற்கு பதிலடியாக, இஸ்ரேல் நகரங்களை குறிவைத்து ஈரான் இராணுவம் ஏவுகணைகள், ட்ரோன்கள் மூலம் அதிதீவிர தாக்குதல்களை நடத்தியது.

இந்த நிலையில், இரு நாடுகள் இடையே நேற்று 3 ஆவது நாளாக போர் நீடித்தது. இஸ்ரேல் நகரங்களை குறிவைத்து ஈரான் இராணுவம் 150 ஏவுகணைகளை வீசியது. இதில் பெரும்பாலான ஏவுகணைகள் நடுவானில் இடைமறித்து அழிக்கப்பட்டன. எனினும், சில ஏவுகணைகள் இஸ்ரேல் பகுதிகளில் விழுந்தன. இஸ்ரேலின் பாட் யாம் நகரில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பின்மீது ஈரான் ஏவுகணை விழுந்து வெடித்து சிதறியது. இதில் 6 பேர் உயிரிழந்தனர். 100 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இஸ்ரேலின் வேறு சில பகுதிகள் மீதும் ஏவுகணைகள் விழுந்தன.

ஈரான் தாக்குதலில் இஸ்ரேலில் இதுவரை 13 பேர் உயிரிழந்துள்ளனர். 200 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

இஸ்ரேலின் ஹனிபா நகரில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது' என்று இஸ்ரேல் அரசு வட்டாரங்கள் கூறின.

ஈரான் தலைநகர் தெஹ்ரானில் அந்த நாட்டின் அணுசக்தி தலைமையகம் உள்ளது. இதை குறிவைத்து இஸ்ரேல் ட்ரோன்கள் நேற்று தாக்குதல் நடத்தின. இதில் அணுசக்தி தலைமையகம் தீக்கிரையானது. தெஹ்ரான், பூசெகர் பகுதிகளில் உள்ள எண்ணெய் வயல்கள் மீது இஸ்ரேலின் ட்ரோன்கள் தாக்குதல் நடத்தின. இதில், எண்ணெய் வயல்கள் தீப்பிடித்து எரிந்தன. ஈரானின் இராணுவ முகாம்கள் உட்பட 150 இடங்களை குறிவைத்து இஸ்ரேல் போர் விமானங்கள், ட்ரோன்கள் தாக்குதலை நடத்தின.

'இஸ்ரேல் இராணுவ தாக்குதலில் ஈரான் முழுவதும் இதுவரை 140 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். நூற்றுக்கணக்கானோர் படுகாயம் அடைந்துள்ளனர். இஸ்ரேல் தொடர்ச்சியாக தாக்குதல் நடத்துவதால், மெட்ரோ ரயில் நிலையங்கள், சுரங்கப் பாதைகளில் பாதுகாப்பாக இருக்குமாறு மக்களை அறிவுறுத்தி உள்ளோம்' என்று ஈரான் அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஈரான் ஜனாதிபதி மசூத் பெசெஷ்கியன் கூறும்போது,

"இஸ்ரேலுக்கு எதிராக ஒட்டுமொத்த முஸ்லிம் நாடுகளும் ஓரணியில் திரள வேண்டும். அப்போதுதான் இஸ்ரேலின் சதிகளை முறியடிக்க முடியும். அமெரிக்காவின் அழுத்தத்துக்கு நாங்கள் ஒருபோதும் அடிபணிய மாட்டோம்." என்று உறுதிபட தெரிவித்தார்.

இஸ்ரேல் இராணுவம் நேற்று வெளியிட்ட அறிக்கையில்,

"ஈரான்மக்களுக்கு எதிராக நாங்கள் போரிடவில்லை. ஈரானின் கொடுங்கோல் ஆட்சிக்கு எதிராகவே போரிடுகிறோம். ஈரான் இராணுவ முகாம்களுக்கு அருகில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு கேட்டுக் கொள்கிறோம்.;; என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக சர்வதேச பாதுகாப்பு நிபுணர்கள் கூறும்போது,

"இஸ்ரேல் - ஈரான் இடையிலான போர் தீவிரமடைந்து வருகிறது. இதனால், மத்திய கிழக்கு நாடுகளில் பதற்றம் அதிகரித்துள்ளது. ஈரானுக்கு பக்கபலமாக ரஷ்யா, சீனா, வடகொரியா, துருக்கி உள்ளிட்ட நாடுகள் அணிவகுத்துள்ளன. இஸ்ரேலுக்கு ஆதரவாக அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் ஓரணியில் திரண்டுள்ளன. இந்த சூழலில், இஸ்ரேல் - ஈரான் இடையே போர் நீடிப்பது, மூன்றாம் உலகப்போருக்கு வித்திடும்." என்று அச்சம் தெரிவித்துள்ளனர்.



# ஈரானின் புரட்சிகர காவல்படையின் தலைவர் இஸ்ரேலின் தாக்குதலில் பலி



தெஹ்ரான் மீதான இஸ்ரேலிய தாக்குதலில், ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல்படையின் உளவுத் துறைத் தலைவர் மொஹமட் கசெமி கொல்லப்பட்டுள்ளார் என ஈரான் உறுதிப்படுத்தியுள்ளது.

அத்துடன் துணைத் தலைவர் ஹசன் மொஹாகிக் மற்றும் உளவுத் துறை அதிகாரி மொஹ்சென் பகேரி ஆகியோரும் இந்த தாக்குதலில் உயிரிழந்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையே விரைவில் அமைதி ஏற்படும்; ட்ரம்ப்

இந்தியா - பாகிஸ்தான் இடையே என்னுடைய தலையீட்டால் அமைதி ஏற்பட்டதைப் போல விரைவில் இஸ்ரேல் - ஈரான் இடையே அமைதி ஏற்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தனது ட்ருத் சமூக வலைதளத்தில் குறிப்பிடுகையில்,

"ஈரானும் இஸ்ரேலும் ஒரு ஒப்பந்தத்துக்கு வரவேண்டும். இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கும் இடையே, அமெரிக்காவுடனான வர்த்தகத்தைப் பயன்படுத்தி, விரைவாக ஒரு நல்ல முடிவை எடுத்து, போரை நிறுத்த முடிந்த இரண்டு சிறந்த தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு ஒற்றுமையை நான் கொண்டு வந்தேன்.



மேலும், எனது முதல் பதவிக் காலத்தில், செர்பியாவுக்கும் கொசோவோவுக்கும் இடையே பல தசாப்தங்களாகச் நடந்து கொண்டிருந்ததைப் போல, கடுமையான மோதல் நடந்து கொண்டிருந்தது. இந்த நீண்டகால மோதல் பெரும் போராக வெடிக்கத் தயாராக இருந்தது. நான் அதை தடுத்து நிறுத்தினேன் (சில முட்டாள்தனமான முடிவுகளால் பைடன் நீண்டகால வாய்ப்புகளை பாதித்துள்ளார். ஆனால் நான் அதை மீண்டும் சரிசெய்வேன்)

எகிப்து மற்றும் எத்தியோப்பியா இடையே நைல் நதிக்கு நடுவே அணைக்காக கடும் சண்டை நடந்தது. எனது தலையீட்டால் குறைந்தபட்சம் இப்போது அங்கு அமைதி நிலவுகிறது. அது அப்படியே நீடிக்கும். அதேபோல், இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையில் விரைவில் அமைதி ஏற்படும். இப்போது பல அழைப்புகளும் சந்திப்புகளும் நடக்கின்றன. நான் நிறைய செய்கிறேன், எதற்கும் ஒருபோதும் பேர் கிடைப்பதில்லை. ஆனால் அது பரவாயில்லை. மக்கள் புரிந்துகொள்கிறார்கள். மத்திய கிழக்கை மீண்டும் சிறந்ததாக்குவோம்." என்று குறிப்பிட்டுள்ளார்.



# மகனின் திருமணத்தை ஒத்திவைத்தார் இஸ்ரேலிய பிரதமர் நெதன்யாகு

இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் மகனின் திருமணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இஸ்ரேல் மற்றும் ஈரான் ஆகிய இரு நாடுகளுக்கும் இடையிலான பதற்றநிலையை கருத்தில் கொண்டு இந்த தீர்மானத்தை நெதன்யாகு எடுத்துள்ளார் என கூறப்படுகிறது. நெதன்யாகுவின் மகனின் திருமணம் நாளை நடைபெறவிருந்த நிலையிலேயே இவ்வாறு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பக்கம் 03


கனடா முரசு

திங்கட்கிழமை | 16/06/2025

## கத்தி குத்து தாக்குதல் தொடர்பில் பெண் கைது

டொரண்டோவில் கத்தி குத்து தாக்குதல் நடத்திய பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நகரின் மிட்டவுன் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் 02




# ட்ரம்ப் உடனான மோதலைத் தவிர்க்க கனடாவில் ஒன்றுகூடும் தலைவர்கள்

**கனடாவில் நடைபெற உள்ள ஜி-7 மாநாட்டில் டொனால்ட் ட்ரம்பின் மோதலைத் தவிர்க்க தலைவர்கள் சந்திக்க உள்ளனர் என தகவல்கள் கூறுகின்றன.**

**அமெரிக்காவுடன் வெளியுறவுக் கொள்கை மற்றும் வர்த்தகம் தொடர்பாக கனடா பிளவுகளை சந்தித்துள்ளது.**

**இந்த நிலையில்தான் கனடாவில் ஜி-7 மாநாடு நடைபெற உள்ளது. இதில் பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான், பிரித்தானியா, கனடா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் தலை வர்கள் சந்திப்பு நடத்துகின்றனர்.**

அமைதி மற்றும் பாதுகாப்பை வலுப்படுத்துதல், முக்கியமான கனிம விநியோக சங்கிலிகளை உருவாக்குதல் மற்றும் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் ஆகியவை தனது முன்னுரிமைகள் என்று பிரதமர் மார்க் கார்னி கூறுகிறார்.

ஆனால், அமெரிக்க வரிகள் மற்றும் மத்திய கிழக்கு மற்றும் உக்ரைனில் உள்ள மோதல்கள் போன்ற பிரச்சினைகள் பெரிதும் இந்த கூட்டத்தில் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதன்மூலம் ட்ரம்ப் மோதலைத் தவிர்க்க இந்த ஜி7 கூட்டம் நடைபெற உள்ளதாக பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில், இஸ்ரேலிய தாக்குதல்கள் ஜி7 உச்சிமாநாட்டை எவ்வாறு பாதிக்கும் என்பது குறித்து கார்னியின் அலுவலகம் கருத்து தெரிவிக்க மறுத்துவிட்டது.

# கனடாவில் சிறுவர்களுக்கான பற்தூரிகை குறித்து எச்சரிக்கை




நாடளாவிய டொலொராமா கடைகளில் விற்பனை செய்யப்பட்ட ஒரே கெயார் பேபி பிரஸ் எனும் சிறுவர் பற்தூரிகை தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்ட்டுள்ளது.

கனடிய சுகாதார திணைக்களம் இது தொடர்பிலான எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது.

இந்த பற்தூரிகை தயாரிப்பு குறைபாடுடன் இருப்பதாகவும், அது இரண்டு துண்டுகளாக முறிந்து குழந்தைகளுக்கு மூச்சுத்திணறல் ஏற்படுத்தும் அபாயம் இருப்பதாகவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தயாரிப்பு குறைபாடு குறித்து ஒரு நுகர்வோரிடமிருந்து முறைப்பாடுகளைப் பெற்றதாக டொலொராமா நிறுவனம் தெரிவித்துள்ளது.

இருப்பினும், இதுவரை மூச்சுத்திணறல் சம்பவங்கள் எதுவும் 02



# பனாமாவில் காணாமல் போன குடும்பம்; சிசு சடலமாக மீட்பு

பனாமாவில் கனடாவின் ஹமில்டனைச் சேர்ந்த குடும்பம் ஒன்றை காணவில்லை எனவும் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த சிசு சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சிசுவின் தந்தையையும் சகோதாரியையும் தொடர்ந்தும் காணவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹமில்டனைச் சேர்ந்த குசேன் இக்பால் அவரது ஏழு மாத மகன் மற்றும் 2 வயது மகள் ஆகியோருடன் மத்திய அமெரிக்க நாடான பனாமாவிற்கு சென்றிருந்தார்.

பின்னர் இவர்கள் மூவரும் காணாமல் போனதாக உறவினர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து பனாமா அதிகாரிகள் மேற்கொண்ட தீவிர தேடுதல்களின் போது பனாமாவின் சான்குயினோலா என்னும் நதிக்கரையில் சிசுவின் சடலம் மட்டும் மீட்கப்பட்டுள்ளது.

காணாமல் போன நபர் உளநலப் பிரச்சினைகளினால் பாதிக்கப்பட்டிருந்தார் என அவரது குடும்ப உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

மேற்படி நபர் எதனால் குழந்தைகளுடன் இவ்வாறு சென்றார் என்பது புரியவில்லை என உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

காணாமல் போன நபரின் மனைவி பனாமாவில் வசித்து வருகிறார் என தெரிவிக்கப்படுகின்றது.

காணாமல் போனவர்களை தேடும் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.




## கத்தி குத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த கத்திக் குத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் 50 வயதுக்கும் மேற்பட்ட ஆண் ஒருவர் கத்தி குத்து காயங்களுக்கு உள்ளான நிலையில் கிடப்பதனை அவதானித்துள்ளனர்.

அவர் உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். மேற்படி நபருக்கு உயிராபத்து இல்லை என மருத்துவமனை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் வயது முதிர்ந்த பெண் ஒருவர் சம்பவ இடத்திலேயே கைது செய்யப்பட்டுள்ளார். எனினும், அவருடைய பெயரையும், சம்பவத்தின் காரணத்தையும் தற்போது வரை வெளியிடவில்லை.

சம்பவம் தொடர்பில் விசாரணை நடைபெற்று வருகிறது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டொலொராமா அல்லது கனடா சுகாதார துறைக்கு பதிவாகவில்லை. இத்தகவலை அடுத்து, இப்பொருளை இனி இறக்குமதி செய்யவோ, விற்பனை செய்யவோ மாட்டோம் என டொலொராமா நிறுவனம் அறிவித்துள்ளது.

இவ்வகை பற்தூரிகை பயன்படுத்துவதை உடனடியாக நிறுத்த வேண்டும் என சுகாதார திணைக்களம் அறிவித்துள்ளது. பயன்படுத்தியதில் காயம் ஏற்பட்டிருந்தால், உடனடியாக மருத்துவ உதவியை நாட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நிலைமையை தொடர்ந்து கண்காணிக்க சுகாதாரத்துறை நடவடிக்கை எடுத்து வருவதாகவும் கூறியுள்ளது.



# கனடாவில் காணாமல் போனவர் ஆற்றிலிருந்து சடலமாக மீட்பு

கனடாவில் காணாமல் போனதாக அறிவிக்கப்பட்ட நபர் கோவிச்சான் ஆற்றில் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த வார தொடக்கத்தில் காணாமல் போனதாக அறிவிக்கப்பட்ட ஒருவர், கோவிச்சான் ஆற்றில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்த மரணத்தில் எந்தவிதமான குற்றச் செயலும் நடந்ததற்கான சந்தேகம் இல்லை என வடக்கு கோவிச்சான் - டங்கன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த திங்கள் கிழமை, கோவிச்சான் ஆற்றின் பிரபலமான பகுதியான பாரடைஸ் பூல்ஸ் அருகே காணாமல் போனதாக அந்த நபர் குறித்து தகவல் அளிக்கப்பட்டது.

தகவல் கிடைத்தவுடன், தேடுதல் மற்றும் மீட்புக் குழுவினர் சம்பவ இடத்திற்கு அனுப்பப்பட்டனர்.

அதிகாரிகள் மேற்கொண்ட தேடுதலில், அந்த நபரின் உடல் ஆற்றில் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸ் உறுதிப்படுத்தியுள்ளது. இந்த மரணத்தில் எந்தக் குற்றச் செயலும் சம்பந்தப்படவில்லை என புலன்விசாரணையாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த துயர சம்பவத்திற்கான முழுமையான சூழ்நிலைகளைத் தீர்மானிப்பதற்காக, பொலிஸ் தற்போது சாட்சிகளிடம் விசாரித்து வருவதுடன், பி.சி. கரோனர்ஸ் சேவையுடனும் இணைந்து செயல்பட்டு வருகிறது.

கடந்த வாரம் பாரடைஸ் பூல்ஸ் பகுதியில் இருந்தவர்கள் அல்லது இந்த வழக்கு தொடர்பான தகவல்களை வைத்திருப்பவர்கள், இதுவரை பொலிஸாரை தொடர்பு கொள்ளாதவர்கள் 250-748-5522 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளுமாறு பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.a

